## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 280/2017 | Date : 05.11.2024 | DW 1 |
|---|---|---|
| Name: சந்துரு (எ) முனுசாமி | த/பெ. முனியப்ப கவுண்டர் | |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

பி.வா.சா.ஆ.1 ஆவணமான உயில் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் பெயர் முனியப்ப கவுண்டர் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணமான உயில் ஆவணத்தில் அனைத்து பக்கங்களிலும் முனிய கவுண்டர் என்று கையொப்பமிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் 2 வது பக்கத்தில் உள்ள முனிய கவுண்டர் என்ற இரண்டு கையொப்பங்களுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அனைத்து பக்கங்களிலும் உள்ள கையொப்பங்களில் மாற்றம் உள்ளது என்றும் மேற்படி ஆவணம் என்னால் தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால்தான் எனது குடும்பத்தை சேர்ந்தவர்களிடமும் உள்ளூர் நபர்களிடமும் கையொப்பம் பெறாமல் எனது சகோதரியின் கணவர் மற்றும் அவரது தகப்பனாரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளின் பூமி மேல் புறத்திலும், எங்கள் பூமி கரையை ஒட்டி கீழே உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருப்பது எனது தாயார் இறந்த பிறகு எனது காட்டில் எனது தாயாருக்கு கட்டப்பட்ட சமாதி என்றால் சரிதான். எனது தகப்பனாரின் உடலை எரித்தார்கள் என்றும் புதைக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கல்கட்டிற்கு மேலே உள்ள நிலம் வாதிகளுக்கு சொந்தமானது என்றும் கல்கட்டிற்கு கீழே உள்ள நிலம் எங்களுக்கு சொந்தமானது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் எனது தகப்பனாரின் உடலை எரியூட்டப்பட்ட இடம் வாதிகளின் சொத்தில் இருப்பதாக உள்ளது என்றால் எங்களது நிலத்தில் தான் எனது தகப்பனாரின் உடல் எரியூட்டப்பட்டது. அதன்பிறகு வாதிகள் அவர்களது நிலத்தில் மேற்படி அமைப்பை ஏற்படுத்திக்கொண்டார்கள். நான் சொல்வது தவறு என்றும் மூத்த மகன் என்ற முறையிலும், வாதிகளுக்கு சொந்தமான நிலத்தில் தான் எங்களது தகப்பனாரின் உடல் எரியூட்டப்பட்டது என்றும், நான் மேற்படி இடத்தில் இருந்து மண் எடுத்து எனது தாயாரின் சமாதிக்கு அருகில் எனது தகப்பனார் சமாதி இருப்பதாக ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு 2017 ம் வருடத்தில் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2019 ம் வருடத்தில் எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் இறந்த பிறகு தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி எனக்கு ஒரு உரிமை ஏற்படுகிறது என்றால் சரிதான்.

அதனால் எனக்கு உரிமை வருவதற்கு முன்னதாகவே வாதிகள் அவர்களுக்கு உரிய பாகம் கோரி வழக்கை தாக்கல் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.24 ஆவணம் 23.01.2020ம் தேதியன்று State Bank of India, ஜலகண்டாபுரம் கிளையில் பெற்ற கடன் தொகையை தீர்ப்பதற்கான மக்கள் நீதிமன்ற அழைப்பாணை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில்தான் நான் மேற்படி வங்கியில் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 2010ம் வருடத்திலேயே நான் கடன் பெற்று கட்டாமல் விட்டுவிட்டேன். நான் சொல்வது தவறு என்றும் 2016ம் வருடத்தில் தான் நான் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.24 ஆவணத்தில் 2016ம் வருடத்தில் கடன் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை, முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு இவ்வழக்கு காலவரையறை சட்டம் மற்றும் வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்வது தவறு என்றும், இதுநாள் வரை தாவா சொத்துக்கள் கூட்டு சுவாதீன அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.26 ஆவணமான தாவா சொத்திற்கு பட்டா மாறுதல் உத்தரவு 2009ம் வருடத்தில் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணமான உயில் ஆவணத்தின் படி எனது அம்மா இறந்த பிறகு தான் மேற்படி ஆவணம் நடைமுறைக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் ஆவணம் எழுதப்பட்டால் மேற்படி ஆவணம் உண்மையான ஆவணம் என்று நிரூபிக்கப்பட்ட பிறகு தான் பட்டா மாறுதல் செய்ய வேண்டும் என்றும் அதற்கு முன்பாக உயில் ஆவணத்தில் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்ய வட்டாட்சியருக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பி.வா.சா.ஆ.26 ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் ஆறு நபர்கள் பெயரில் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் 1999ம் வருடத்தில் ஏற்பட்டுள்ள நிலையில் 1988ம் வருடத்தில் எனது தாயார் பெயரிலும் எனது தந்தை பெயரிலும் கந்தாயம் கட்டியதாக ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1990 ம் வருடத்திலேயே உயிலில் கண்ட சொத்திற்கும் சேர்த்து எனது பெயரில் கந்தாயம் கட்டியதாக பி.வா.சா.ஆ.7 முதல் பி.வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பொதுசொத்தில் எனது அண்ணன்களுக்கு பாகம் கொடுக்க கூடாது என்கிற நோக்கத்தோடு மேற்படி ஆவணங்களை நான் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு பாத்தியமான சொத்துக்கள் மகன்கள் மூவருக்கும் சேரவேண்டும் என்றுதான் கூறி வந்தார் என்றும், நானும் எனது தாயாரும் சேர்ந்து எனது தகப்பனாரிடம் போலியான உயில் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. 2017ம் வருடம் வரை தாவா சொத்துக்கள்

**வாதிகள் மற்றும் எனது கூட்டு அனுபவத்தில்தான் இருந்து வந்தது என்றும், சொத்தில் பாகம் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் அவர்கள் தாவா சொத்தை ஓட்டக் கூடாது என்று நான் தகராறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி தாவா சொத்தில் வாதிகளுக்கு பாத்தியமான பாகத்தை கோரிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

ஒம்/—சந்துரு (எ) முனுசாமி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.